# قَصِيْدَةُ الْاَحْمَدِيَّة

وتليها

# قَصِيْدَةُ الْعَوْنِيَّة

# கஸீதத்துல் அஹ்மதிய்யா

(மற்றும்)

# கஸீதத்துல் அவ்னிய்யா

குத்புஸ்ஸமான், ஷம்ஷுல் வுஜூத், ஜமாலிய்யா

**அஸ்ஸய்யித் கலீல் அவ்ன்**

அல்ஹஸனிய்யுல் ஹாஷிமிய் மௌலானா நாயகமவர்களின்

## ஞான வெளிப்பாடுகள்

வெளியீடு

ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை

قَصِيْدَةُ الْاَحْمَدِيَّة

وتليها

قَصِيْدَةُ الْعَوْنِيَّة

கஸீதத்துல் அஹ்மதிய்யா

(மற்றும்)

கஸீதத்துல் அவ்னிய்யா

குத்புஸ்ஸமான், ஷம்ஷுல் வுஜூத், ஜமாலிய்யா

அஸ்ஸய்யித் கலீல் அவ்ன்

அல்ஹஸனிய்யுல் ஹாஷிமிய் மௌலானா நாயகமவர்களின்

ஞான வெளிப்பாடுகள்

வெளியீடு

ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# قَصِيْدَةُ الْاَحْمَدِيَّة

وَتَلِيهَا

# قَصِيْدَةُ الْعَوْنِيَّة

# கஸீதத்துல் அஹ்மதிய்யா

(மற்றும்)

# கஸீதத்துல் அவ்னிய்யா

குத்புஸ்ஸமான் ஷம்ஷுல் வுஜூத் ஜமாலிய்யா

**ஸய்யித் கலீல் அவ்ன்**

**அல்ஹஸனிய்யுல் ஹாஷிமிய் மௌலானா**

நாயகமவர்களின் ஞான வெளிப்பாடுகள்

வெளியீடு

ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை

# நூல் விபரம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | களீதத்துல் அஹ்மதிய்யா மற்றும் களீதத்துல் அவ்னிய்யா |
| ஆசிரியர் | : | குத்புஸ்ஸமான் ஷம்ஷுல் வுஜூத் ஜமாலிய்யா ஸய்யித் கலீல் அவ்ன் அல்ஹஸனிய்யுல் ஹாஷிமிய் மௌலானா நாயகமவர்கள் |
| மொழி | : | அரபி - தமிழ் |
| நூல் வகை | : | கவிதை |
| நூல் உரிமை | : | ஆசிரியருக்கு |
| பதிப்பு ஆண்டு | : | முதற் பதிப்பு : ஜூலை **1974**<br>இரண்டாம் பதிப்பு : பிப்ரவரி **1998**<br>மூன்றாம் பதிப்பு : ஜனவரி **2008** |
| பக்கங்கள் | : | 52 |
| எழுத்து | : | 16 புள்ளிகள் |
| வெளியீடு | : | ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை |
| ஒளிஅச்சு & அச்சிட்டோர் | : | ரிப்தா கம்ப்யூட்டர் ஆப்செட் பிரிண்டர்ஸ்<br>2/228, ஹாஜி பாத்திமா காம்ப்ளக்ஸ்,<br>ஃபயர் சர்வீஸ் எதிரில், மேற்கு ரத வீதி,<br>திண்டுக்கல் - 624 002.<br>**Cell : 99445 - 76165** |



بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# قَصِيْدَةُ الْاَحْمَدِيَّةِ

# وَتَلِيهَا

# قَصِيْدَةُ الْعَوْنِيَّة وَقَصِيْدَةُ نَيْلُ الْمُرَادْ

**களீததுல் அஹ்மதிய்யா (மற்றும்) களீததுல் அவ்னிய்யா**

## உள்ளடக்கம்


1. வஹ்ததுல் வுஜூது (அறபுப்பா)
2. ஏக காட்சி (வஹ்தத்துல் வுஜூது - அறபுப்பாவின் மொழிபெயர்ப்பு)
3. முதல் பதிப்பு முன்னுரை
4. பதிப்புரை
5. புகழ்மாலை
6. குத்பிய்யா (பைத்து)
7. களீததுல் அஹ்மதிய்யா ஃபீ நஷீததில் அவ்னிய்யா
8. அல் களீததுல் அவ்னிய்யா ஃபீ தவ்ஹீதில் அஹ்மதிய்யா
9. அருஞ்சொற்பொருள் - விளக்கம்

# وَحدَةُ الْوُجُوْد

هُوَالْوُجُوْدُ لاَ لَهُ اَشْيَا اُخَر

هُوَالْكَمَالُ اَ نَّهُ لاَ مُخْـــتَصَر

هُوَالَّذِىْ اَ لْاٰنَ بِالتَّصْرِيْف

بَلْ اَ نَّهُ مِثْلُ الْقَدِيْمِ الْمُفْـــتَخَرْ

اَيْنَ كَمَا بِمَا وَكَيْفَ لاَ لَهُ

وَلاَالضَّمَائِرُ كُلُّهَا بِمُحْتَصَر

بَطْـــنًا وَّظَهْرًا لاَ لَهُ فِىْ كُنْهِهِ

خُلْقٌ وَذَاتُهُ بِمُطْـــلَقٍ طُهْر

وَمَنْ فَـــنَى فِىْ وَحْدَةِالْوُجُوْد

مِنْ عِنْدِهِ كُلُّ تَجَلّٰى وَظَهَر

(للمؤلف)



# ஏக காட்சி

**அ**துவே ஏக மயமானது (அனைத்தும் அதுவேயாதலால்) அதனைத் தவிர்ந்த வேறு பொருட்கள் அதனுக்கு (அயலாய்) இல்லை. அதுவே பூரணமானது. அதுவே குறுக்கமானதன்று.

இப்பொழுது அது மாறுபட்டுள்ளது. எனினும் அது பெருமைக்குரிய பழமையை (முன்னிருந்ததைப் போன்றது.

எங்கே? என்பதும் ஒன்றைப் போன்றது என்பதும் ஒன்றைக் கொண்டு (ஆனது) என்பதும் எப்படி? என்பதும் அதற்கில்லை. (நான், நீ, அவன், அவள், நாங்கள், நாம், அவர்கள், இவர்கள், அது, இது, அவை, இவை முதலாம்) பிரதிப் பெயர்கள் அனைத்தும் அதனைக் கட்டு (மட்டு)ப்படுத்துபவையன்று.

உள்ளாலும் வெளியாலும் அதன் தாற்பரியத்திலே அதற்கு (இப்படித்தான் எனும்) சுபாவம் (பாங்கு) இல்லை. அதன் பிரணவ உள்ளமை பரிசுத்த சம்பூரணமாகும்.

ஏக மயத்தில் எவன் தன்னை அழித்தானோ அவனிடத்திருந்து அனைத்தும் தோன்றும்; வெளியாகும்.

*(முற்றும்)*

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# முதல் பதிப்பு

## முன்னுரை

புகழனைத்தும் சர்வ உலக இரட்சகனான அல்லாஹ்வுக்கே உரியன. அவனது ஸலவாத்தும் ஸலாமும் அவனது பேரன்புக்கு உரித்தான ஹபீப் முஹம்மது ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் மீதும் அவர்களின் தோழர்கள், சந்ததியார் மீதும் அவர்களின் குலத்துதித்த அவர்களின் 'ஸிர்ருகள்' எனும் இரகசியங்களையும் தாதுத்துவத்தின் அகமியங்களையும் உலகோர்க்கு எண்பித்துக் காட்டும் அவர்களின் குலவிளக்காம் ஹள்ரத் முஹிய்யுத்தீன் அப்துல் காதிர் ஜீலானி (குத்தஸல்லாஹு) அவர்களிலிருந்து 21ஆவது வாரிசும் எம் ஆருயிர் ஆத்மத் தந்தையுமான குத்புஸ்ஸமான் ஷம்ஷுல் வுஜூத் ஜமாலியா ஸய்யிது கலீல் அவ்ன் அல்ஹஸனிய்யுல் ஹாஷிமிய் மௌலானா அவர்கள் மீதும் அவர்கள் சந்ததியார்மீதும் உண்டாவதாக. இந்த ஆத்மார்த்தப் பாரம்பரியத்தில் உருவான ஹக்குடைய பேரருள் கருணாமாரி பொழியுமாக. இவர்களை உள்ளும் புறமும் பின்பற்றும் நம் அனைவரையும் ஹக்குடைய கிருபா கடாட்சம் எனும் சுடரொளி மிக்க காவல் அணைப்பாக சூழ்ந்து ஆட்கொள்ளுமாக! ஆமீன்.

என் அன்பிற்குரிய அகம் தெளிந்த ஆத்ம நேயர்களே! என் ஆத்மகுரு, முஹம்மதிய்யத்தின் சுடரொளி, முஹிய்யுத்தீனியத்தின் அமரஜோதி, குத்புஸ்ஸமான் ஷம்ஷுல் வுஜூத் ஜமாலியா ஸய்யிது கலீல் அவ்ன் அல்ஹஸனிய்யுல் ஹாஷிமிய் மௌலானா அவர்களை நான் எவ்வாறு அறிந்து 'பைஅத்' எனும் தீட்சை பெற்றேன் என்பதை இங்கே சிறிது விளக்கிக் கூறுவது சாலச் சிறந்ததாகுமெனக் கருதுகிறேன்.

உயிர்களுக்கு அதிபதியான இறைவன் முதலில் உடலைத் துன்புறுத்துகிறான்; அப்பால் ஞானப் பேரொளியால் அதற்கு



இன்பமளிக்கிறான்..." என்று மவ்லானா ரூமி (ரஹ்) அவர்கள் சொன்னபடி அகத்தினுள் 'அல்லாஹ்வின் மீதுள்ள பிரியம்' எனும் வித்தை அவன் வளரச் செய்து அது செழித்துப் பூத்துக் காய்த்துக் குலுங்கும்போது புறத்தால் 'துன்பம்' எனும் சோதனைகொண்டு பரிபக்குவப்படுத்த - அதனை 'சப்ரன் ஜமீலா' எனும் அழகான பொறுமை கொண்டு நான் எதிர்கொண்ட காலமது.

"தாபமடைவது என் பாதை..." என்று தாஹா நபி (ஸல்) அவர்கள் சொன்னபடி என் அகத்தினுள்ளிருந்து எழுந்த தாபத்தின் குரலோசை பாதுகாப்புத் தேடி கதறி அழும் சோகத்தின் பண்ணாகத் திக்கெட்டும் எதிரொலித்தது. நான் திக்குத் திசையற்ற ஏகாந்தம் எனும் பாலைவனத்தில் காணாமற்போன 'மஜ்தூப்' ஆனேன். மலைகளிலும் வனாந்தரங்களிலும் உளம் பதற அகம் துடிக்க விழிகள் நீர் சொரிய எழுந்த என் ஆற்றொணாத் துயர் செப்பும் சோகத்தின் கீதங்கள் எத்தனை! எத்தனை!!

காருண்யம் மிக்க பரிசுத்த ஹக்கின் திருவருளால் எனது துன்ப கீதத்தின் மிக நுண்ணிய ஒலிக்கற்றைகளை செவிமடுத்த என் ஆத்மத் தந்தை அவர்கள் வரண்டு, சோர்ந்து, சாய்ந்துகிடந்த எனக்குப் பரிசுத்தமான 'தஸ்னீம்' எனும் குளிர்பானமாய்த் தங்கள் தரிசனையருளி எனது தாகவிடாய் தீர்த்தார்கள். இது மலேசியாவின் தலைநகர் கோலாலம்பூரில் நான் தங்கியிருந்தபோது என் ஆத்மத் தந்தை அவர்களை முதன் முறையாகக் கனவில் தரிசித்து ஆனந்தப் பூரிப்படைந்த நிலை. இதற்கு சுமார் ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியாவில் என் ஆத்மத்தந்தை அவர்களின் தூல சந்திப்பின்போது நான் வெளிரங்கத்திலும் 'பைஅத்' பெற்றேன்.

என் "ஷெய்க்" அவர்களுக்கு, சில ஆண்டுகளுக்கு முன் ஹக்கின் புறத்திலிருந்து வாரிதாத்தென்னும் அகச்சுடராய் வெளியான 'அல்கஸீததுல் அவ்னிய்யா' எனும் ஆத்மார்த்த இரகசியங்களை விளக்கும் கவிதை வடிவான கருத்துக் கோவையை ஆன்ம நேயர்கள் பயன்பெறும் விதத்தில் அச்சியேற்ற அவாவுற்றேன்; அனுமதி கோரினேன்; "ஷெய்க்" அவர்கள் அன்புகூர்ந்து இசையுறவே அவர்களின்

ஆத்மார்த்த கிரந்தங்களில் முதல் நூலாக இதனை அச்சியேற்றும் பெரும்பேறு எனக்குக் கிட்டியமைக்கு எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்குப் பெரிதும் நன்றி செலுத்துகிறேன்.

அவர்களுக்கு வெளியான வாரிதாத் தென்னும் அகச்சுடர்களில் :

"எண்ணில் வலியார் நம் படையில் வீரர்களாமே..." என்றபடி மாந்தரும் மலக்குகளும் ஜின்களும் பரிசுத்த ரூஹுகளும் சூழப்பெற்று சோபனம் கூறப்பட்டவர்களாய் தங்களின் ஞானச் சேனைகளை உலகின் நாலா திக்குகளிலும் அனுப்பி இப்லீஸின் சேஷ்டைகளை முறியடித்து மக்களுக்கு நேர்வழி காட்டும் குத்புஸ்ஸமானாகத் திகழ்கிறார்கள்.

அவர்களின் சிம்மப் பார்வையில் மிகவும் இலேசான கடைக்கண் வீச்சானது என்னில் தடைகளாயிருந்த திரைகளை சுக்கல் சுக்கலாக்கியது.

நேயர்களே! நம் "ஷெய்க்" அவர்களால் இயற்றப்பட்ட, இயற்றப்படும் ஆத்துமார்த்த இரகசியங்களை விளக்கும் அமர காவியங்கள் அநேகம் உள. அவைகளைச் சிறுக சிறுக அச்சியேற்றும் பணி காத்திருக்கிறது என்பதை மகிழ்வோடு தெரிவிக்கிறேன்.

பரிசுத்த ஹக்கு, நம் "ஷெய்கு" நாயகம் அவர்களின் வழிகாட்டலை நாம் அகம்-புற மிரண்டிலும் பின்பற்றி இருமைப்பேறும் பெற்று முக்திப் பேறடையக் கிருபை செய்யுமாக.

ஆமீன்! ஆமீன்! யாறப்பல் ஆலமீன்!

எமனீசுவரம். உங்கள் அன்பன்,

தமிழ்நாடு. **மு. அப்துல் கரீம்.**



## இரண்டாம் பதிப்பின்

# பதிப்புரை

**அ**ங்கிங்கெனாதபடி எங்கும் பரிபூரணமாய் விரவிக் கலந்திருக்கும் ஏக இறைவனுக்கே புகழனைத்தும்.

சர்வ சத்தான சம்பூரணத் தோன்றலான எம்பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மீதும் அவர்கள்தம் புனிதக் குடும்பத்தார் மீதும் ஸஹாபாப் பெருமக்கள் மீதும் ஸலாத்தென்னும் கருணையும் ஸலாமென்னும் ஈடேற்றமும் என்றென்றும் நின்றிலங்குமாக.

சத்திய வேட்கையையும் சம்பூரணத்தை அறியும் உயர் வழியையும் நமக்களித்த ஏக இறைக்கே நன்றி உரித்தாகுக.

ஞானமின்றித்திரியும் நன்றி கெட்ட கூட்டத்தாருக்கு மத்தியில் உயர் ஞானத்தை வழங்கும் நம் சற்குருநாதருக்கும் நன்றியை உரித்தாக்குகின்றோம்.

ஆத்மஞானப் பேரின்பத்தை அருளாக வழங்கும் நம்முயிரினும் மேலான சங்கைமிகு ஷைகுநாயகமவர்களின் "ஞான வெளிப்பாடுகள்" அஞ்ஞானத்திலிருந்து விடுவித்து மெய்ஞ்ஞானப் பேரறிவைத் தரும் உயர்வான பொக்கிஷங்களாகும். அவற்றை அச்சு வடிவில் கொண்டுவரும் எங்கள் அரிய முயற்சிகளில் இந்நூலும் ஒன்று. "அனைத்தும் ஒன்று" என்னும் சத்தியத்தை உணர்ந்த சான்றோருக்கு இந்நூல் ஓர் அரிய ஆன்மீக விருந்து.

இவற்றை ஓதி மகிழ்வோருக்கு ஏற்றமான நற்பேறுகள் நிச்சயம் உண்டு.

இந்நூல் அச்சிட அனுமதியளித்த சங்கைமிகு சற்குருநாதர் அவர்களுக்கு எங்கள் பணிவான நன்றியை உரித்தாக்குகிறோம்.

இந்நூலை அச்சிட முழுமுயற்சி எடுத்து பொருளாதார உதவி நல்கிய ஆத்ம சகோதரர்களுக்கும் - இந்நூலினை நேர்த்தியாக

அமைத்து உதவிய "மறை ஞானப் பேழை" துணை ஆசிரியர் மௌலவி. N. அப்துஸ்ஸலாம் ஆலிம், B.Com., அவர்களுக்கும் - திருச்சி ஜாமிஆ யாஸீன் - மத்ரஸதுல் ஹஸனைன் அறபுக் கல்லூரிப் பேராசிரியர் மௌலவி N. ஸயீத் முஹம்மது ஆலிம் மிஸ்பாஹி அவர்களுக்கும் - சிறந்த முறையில் அச்சிட்ட அம்மன் அச்சகத்தாருக்கும் எம் ஆழிய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**வெல்க மெய்ஞ்ஞானம்! வீழ்க அஞ்ஞானம்!!**

- ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை
துபை (கிளை)

**மூன்றாம் பதிப்பின்**

## பதிப்புரை

அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)

**நு**புவ்வத், விலாயத்தால் மானிட இனத்தை மகத்துவப்படுத்திய அல்லாஹ்வுக்கே மாபெரும் புகழனைத்தும்.

வலிமார்களுக்கு வழியாகவும் - விழியாகவும் விளங்கும் வள்ளல் நபி (ஸல்) அவர்கள் மீது வற்றாத சலவாத்தும் வான் கருணை சலாமும் உண்டாவதாக!

அன்பிற்கினியவர்களே!

அல்லாஹ்வைக்காட்டி அண்ணலெம்பெருமானை நினைவூட்டி அரிதினும் அரிதான மெய்ஞ்ஞானத்தை அருளாகப் பொழியும் அவ்ன் நாயகரின் ஆத்ம ஞானக் கருவூலமான "கஸீதத்துல் அஹ்மதிய்யா மற்றும் கஸீதத்துல் அவ்னிய்யா" எனும் நூல், புதிய பதிப்புக் காணாமல் முரீதுகள் ஓதக் கிடைக்காமல் இருந்தது. எனவே அதனைப் பதிப்பிக்க உயிரினுமேலான செய்கு நாயகம் அவர்களிடம் அனுமதிபெற்று இதனைப் பதிப்பிக்கும் பாக்கியம் பெற்றோம். சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களுக்கு நன்றியைச் சமர்ப்பிக்கிறோம். இதனை சரிபார்த்து அச்சிட்ட ரிப்தா கம்ப்யூட்டர், கலீபா, ஆலிம் புலவர், S. ஹுஸைன் முஹம்மது மன்பயீ ஹக்கிய்யுல் காதிரிய் அவர்களுக்கு நன்றி கூறி, எல்லாம் வல்ல அல்லாஹ், இதனைப் படிக்கும் அனைவருக்கும் குருநாதர் அவர்களின் மேன்மைகளை விளங்கி ஹக்கில் நிலைக்கும் நற்பேற்றினை அருள்வானாக எனப் பிரார்த்திக்கிறோம்.

அன்புடன்

**M. மஹ்பூபு சுப்ஹானி** ஹக்கிய்யுல் காதிரிய், சென்னை.
**S.B. ஆசிப் M.A.,** ஹக்கிய்யுல் காதிரிய், சென்னை.
**A. காஜா மொய்தீன் சிஷ்தி** ஹக்கிய்யுல் காதிரிய், சென்னை.
**A.K. நஜீர் அகமது** ஹக்கிய்யுல் காதிரிய், சென்னை.



بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

நாகூர் தைக்காத் தெரு மௌலானா மௌலவி
வலிய்யுல் அமீன் அல்ஹாஜ் கலீபா
மர்ஹூம் **K.M.முஹம்மது யாஸீன்** ஆலிம் சாஹிப்
ஹக்கிய்யுல் காதிரிய் அவர்களால்
நமது ஆத்ம குருபிரான் அவர்கள் மீது சொல்லப்பட்ட

## புகழ்மாலை

جَلَّ شَأْنُ الْخَلِيْلِ عَوْنٍ كَفِيْلٍ

عَزَّجَاهُ الْحَفِيْدِ لِلْغَوْثِ جِيْلِيْ

اَنْتَ قُطْبُ الزَّمَانِ صَدْرُ الرِّجَالِ

جُدْلَنَا مِنْكَ فَيْضَ قُدْسِ الْوِصَالِ

اَيْنَ اَنْتُمْ وَنَحْنُ حِيْنَ الْجَلَالِ

قَبْلَ بُدْءِ الْوُجُوْدِ نُوْرِ الْجَمَالِ

كُلُّ مَنْ جَا وَرَاحَ اَهْلِ الْكَمَالِ

جُوْدُهُمْ جُوْدُ مَحْوٍ عَيْنِ الْمُحَالِ

بَرَزَتْ دُرَّةُ الْبَيَاضِ اللَّآلِيْ

مِنْ اِلٰهِ الْعِبَادِ سِرَّالنَّوَالِ

بَعْدَ مَاصَارَ رُوْحَ سُفْلٍ وَعَالٍ
نُفِخَ فِيْ رَوْعِ اٰدَمِ الْاَرْضِ وَالِيْ
كُلُّ رُسُلٍ وَاَنْبِيَآءٍ مِنْ اٰلِ
اٰدَمِ الْجَدِّ سَيِّدِ الْاِنْسِ عَالٍ
خَتَمَ اللّٰهُ نُوْرَ رُسُلِ الْمَعَالِ
بِوُجُوْدِ مُحَمَّدِهِ الْكَمَالِ
كُلُّ كُتُبِ الْاِلٰهِ حَتَّى الْاِنْجِيْلِيْ
كَانَ فِى الْقُرْاٰنِ عَيْنِ الدَّلِيْلِ
كُلُّ مَا فِي السَّمَا وَاَرْضٍ جِبَالٍ
جَامِعٌ فِيْ كَلَامِهِ ذِى الْجَلَالِ
وَلَقَدْ قَالَ جَدٌّ عَوْنٍ فَانِّيْ
تَارِكٌ فِيْكُمُ الثَّقَلَيْنِ عَالِيْ
قَدْ فَهِمْتُ حَدِيْثَ جَدِّالْخَلِيْلِ
فَاتَّخَذْتُ الْقُرْاٰنَ وَالْعَوْنَ وَالِيْ
يَا ابْنَ غَوْثِ الْاَنَامِ هُوْذُوالْمَقَالِ
كُلُّ قُطْبٍ يَجِيْ دَنَا لِمَحَلِّيْ



فَهُوَ مَعَ كُلِّ حَيٍّ مَيْتٍ بِبَالِ
كُلُّ حِبٍّ لَهُ خَبَاءُ الْمَجَالِ
وَكَذَا كُنْتَ فِيْ زَمَانِيْ وَحَالِيْ
كُنْ مَلَاذًا لِكُلِّ مَنْ فِيْ مَحَلِّيْ
اِنْ تَفَكَّرْتُ حَوْلَ دُنْيَا بِبَالِيْ
كَيْفَ مَاكَانَ عَيْشُهَا لَااُبَالِيْ
اِنْ تَذَكَّرْتُ هَوْلَ عُقْبَى الْمَاٰلِ
فَتَوَسَّلْتُ بِكُمُ يَاوَكِيْلِيْ
اَيْنَ دُنْيَا وَاَيْنَ عُقْبٰى لِاَهْلِ
اللّٰهِ كُلٌّ سَوَا سِوَى اللّٰهِ الْوَالِيْ
فَاعْتَرَفْتُ الذُّنُوْبَ طُوْلَ اللَّيَالِيْ
وَرَجَوْتُ الْغُفْرَانَ لِيْ بِالسُّؤَالِ
اَهْلُ بَيْتِ النَّبِيِّ اَمْنٌ لِاَهْلِ
الذَّنْبِ كُنْ شَافِعًالَنَا وَلِمِثْلِيْ
فَلَكَمْ عَاشِقٍ فَنٰى فِى الرَّسُوْلِ
وَلِيَبْقٰى بِمَدَدِهِ الْمَقْبُوْلِ

هَبْ لَنَا مِنْكَ هِمَّةَ الْجَذْبِ الْعَالِ

عُدَّنِيْ مِنْ ذَوِيْ جَلَالٍ جَمَالِ

طَابَ زَمَنُ الْعَبِيْدِ وَفْدُ الْخَلِيْلِ

زَانَ اَعْمَالُهُمْ بِهِمَمِ الْجَلِيْلِ

يَاالٰهَ الْاَنَامِ جُدْلِيْ دَلِيْلِيْ

قُرْبَ وَصْلٍ اِلَيْكَ اَصْلَ الْاَصِيْلِ

صَلَوَاتُ الْاٰلٰهِ عَلَى الرَّسُوْلِ

وَسَلَامُ التَّمَامِ خَيْرًا لِلْاٰلِ

وَالصَّحَابِ النُّجُوْمِ جُلِّ الْوَكِيْلِ

قَدَّسَ اللّٰهُ سِرَّ غَوْثِنَا الْجِيْلِيْ

وَكَذَاسِرَّ نَائِبِهِ الْخَلِيْلِ

وَهُوَ شَمْسُ الْوُجُوْدِ بَدْرُالْكَمَالِ

(تَمَّتْ)



# قصيدة نيل المراد، بقطب الفريد الوداد

لِبُنيّه الوارث السّيّد خليل عون ابن قطب الفريد وغوث الْوحيد السّيّد يس قدّس سرّه

**مَوْلَايَ صَلِّ وَسَلِّمْ دَآئِمًا اَبَدًا**

**عَلٰى حَبِيْبِكَ خَيْرِ الْخَلْقِ كُلِّهِمِ**

الابتداء

اَلْحَمْدُ لِلّٰهِ حَقِّيْ مُعْطِي الدِّيْنِ

مِلْأَالسَّمَآءِ وَدُنْيَا دَامَ لِلْحِيْنِ

صَلّٰى وَسَلَّمْ عَلَيْهِ مُهْدِيَ الدِّيْنِ

وَاٰلِهٖ وَعَلَيْكُمْ قُطْبَ يَاسِيْنِ

يَاقُطْبَ كَوْنِ اِلٰهٍ غَوْثَ كُلِّ وَرٰى

مِنْ فَيْضِكَ الْقُدْسِ قَدْزَانَ الْعُلَاوَسَرٰى

| | |
|---|---|
| اَسْرَارُ رَحْمَةِ رَبِّ الْعَالَمِيْنَ نَرٰى | |
| عَجَبًا بِاَعْمَالِكُمْ يَاقُطْبَ يَاسِيْنِ | |
| اَلنُّوْرُ ضَاءَتْ اِلَيْنَا مِنْ وِصَالِكُمُ | الالف |
| اِلَى الْاِلٰهِ تَعَالَى اللّٰهُ ضَوْئُكُمُ | |
| زَالَ الدُّجٰى وَدَبِيْلٌ مِنْ دُحُوْرِكُمُ | |
| يَاسَيِّدَالْاَوْلِيَا يَاقُطْبَ يَاسِيْنِ | |
| بَانَ الْيَقِيْنُ وَسِرُّ السِّيْنِ مِنْ صِغَرٍ | الباء |
| فَرَّ الْاَبَالِيْسُ وَالْاٰفَاتُ مِنْ صِغَرٍ | |
| تَخَرَّمَ الذَّنْبُ وَالْاٰثَامُ مِنْ نَغَرٍ | |
| بِكُمْ رُنُوٌّ النَّدٰى يَاقُطْبَ يَاسِيْنِ | |
| تَحْتَ اللِّوَآءِ رَسُوْلِ اللّٰهِ حَظُّكُمُ | التّاء |



| | |
|---|---|
| وَمَعْ لِوَآئِكُمْ بِوَحْدَةٍ لَكُمُ | |
| كُلٌّ بِحُبِّكُمْ نَالُوْا بِرَبِّكُمُ | |
| عِزًّا بِاَعْمَالِهِمْ يَاقُطْبَ يَاسِيْنِ | |
| ثَنَاءُ ثَقَلَيْنِ رَبِّ الْعَالَمِيْنَ لَهُ | الثّاء |
| مِنْ بَعْثِكُمْ قُطْبًا غَوْثًا وَزَانَ لَهُ | |
| مِنَ الْكَرَامَاتِ اَنْتُمْ اٰيَةٌ وَلَهُ | |
| هُدَى الْوَرٰى بِكُمُ يَاقُطْبَ يَاسِيْنِ | |
| جَرَى الْعَجَآئِبُ مِنْ صِغَرٍ وَرُدَّبِكُمْ | الجيم |
| حَيٰوةُ حِيْتَانِ نَهْرِمَاتَ عَزَّبِكُمْ | |
| اَلطُّعْمُ يَكْفِيْ لِثَانٍ كَثُرَ مِنْ يَدِكُمْ | |
| لِقَوْمِ مَنْ جَآئَكُمْ يَاقُطْبَ يَاسِيْنِ | |

| | |
|---|---|
| الحاء | حَدٌّ وَلَيْسَ لَهُ نِدٌّ مِنَ الْعَجَبِ |
| | بَدْرُالْكَمَالِ وَشَمْسُ الضَّوْءِلاَتَرِبِ |
| | بَحْرُالْحَقَآئِقِ كَنْزُالْكَرَمِ وَالْوَهْبِ |
| | زَيْنُ السَّلاَمَةِ غَوْثِيْ قُطْبَ يَاسِيْنِ |
| الخاء | خَرَّ الْعَدُوُّ وَجُبُّ الْحُزْنِ مَسْكَنُهُ |
| | مَنْ حَبَّ مَعَكُمْ دَنَا شَرَفًا وَمَلْجَأُهُ |
| | فِي الْجَنَّةِ الْعَدْنِ وَصْلُ الْحَقِّ مَقْصَدُهُ |
| | يَاسَيِّدِيْ غَوْثَنَا يَاقُطْبَ يَاسِيْنِ |
| الدّال | دَوَاءُ دَاءِ سِمٌ وَدُعَاكُمْ مَدَدُ |
| | مَنْ جَآءَ بِالنَّذْرِ لِلسُّقَمَآءِ يَرْتَعِدُ |
| | تَزُوْلُ جَمًّا وَيَارُشْدِيْ لَكُمْ مَجْدُ |



| | |
|---|---|
| | يَانِعْمَةَاللّٰهِ وَالِيْ قُطْبَ يَاسِيْنِ |
| الذّال | ذَلِيْقُ قَوْلٍ وَاَذْكَى الْمِسْكِ رَآئِحَةً |
| | تَرْتِيْبُ عَيْشِكُمْ بِالْعَمَلِ نَاعِمَةً |
| | فِى الْعَمَلِ لَيْسَ لَكُمْ بُطْؤٌ مُؤَخِّرَةً |
| | فَاحَ الزَّمَانُ بِكُمْ يَاقُطْبَ يَاسِيْنِ |
| الرّاء | رُدَّالْبَلاَءُ مِنَ الْقَوْمِ الرَّدِيْءِ اِذَا |
| | جَاءُوْا لَدَيْكُمْ بِاَنْجَآءٍ نَجَوْا فَاذَا |
| | قَدْطَارَ بَرْقًا بِلاَرَجْعٍ رَجٰى فَبِذَا |
| | مُعْطَآءَ مُعْطِيْرِنَا يَاقُطْبَ يَاسِيْنِ |
| الزّاء | زَهْوَالْمَقَالِ اِذَا قَوْمٌ اَتَوْبِشَكَا |
| | يَاتِ بِتَصْرِيْفِهِمْ اَهْدَيْتَهُمْ بِذُكَا |

تَاجُ الْكِرَامِ وَحِيْدُ الْعَهْدِ وَالْاَزْكٰى

يَامُحْتَوِي الْفَخْرِغَوْثِي قُطْبَ يَاسِيْنِ

السّين

سُلْطَانُنَا وَفَصِيْحُ الْقَوْلِ مِنْ فَهَمٍ

سَنِيٌّ سَادَةٍ وَالْاَسْعَادِ وَالنِّعَمِ

خَطِيْرُ نَظَرٍ وَبَتْرَآءٍ مِنَ الْهِمَمِ

يَاقَادِرَالْاَوْلِيَا يَاقُطْبَ يَاسِيْنِ

الشّين

شَرَّحْتَ صَحِيْحَ بُخَارِيٍّ مِنَ الذِّمَمِ

لَمَّادَجٰى لَيْلُ دَاجِيٍّ مِنَ الظُّلَمِ

فَمَاتَرَكْتَ وَلَامِصْبَاحَ لِلْكَرَمِ

نُوْرٌ اَضَآءَ لَكُمْ يَاقُطْبَ يَاسِيْنِ

الصّاد

صَدْيَانُ عِلْمٍ اِذَاجَا حَضْرَةَ الْعِظَمِ



عَلَّمْتَ عِلْمًا اَجَبْتَ السُّؤْلَ لِلْوَهْمِ

وَلَاشَبِيْهَ لَكُمْ فِى الْحُسْنِ وَالشِّيَمِ

كَنْزُالْعُلُوْمِ وَنُوْرِيْ قُطْبَ يَاسِيْنِ

الضّاد

ضِدُّالْعَدِيْمِ عَجِيْبُ الْقَوْلِ يَاسَنَدِيْ

حَيٌّ قَوِيٌّ شَذِيُّ الْعِطْرِ يَاعَمَدِيْ

زَيْنُ الْعِبَادِ وَعَيْنُ الْوَقْتِ يَاصَدَدِيْ

يَاحَامِدَ الْمُصْطَفٰى يَاقُطْبَ يَاسِيْنِ

الطّاء

طِبُّ الْقُلُوْبِ وَعَوْنُ الْاَنْسِ يَارُشْدِيْ

فِى الْجُهْدِكَالْعَهْدِ لَازَىٌّ وَيَامُهْدِيْ

رَئِيْسُ جَمًّا غَفِيْرٍ اَنْتَ يَارَصَدِيْ

يَااَحْسَنَ الْاَوْلِيَا يَاقُطْبَ يَاسِيْنِ

| | |
|---|---|
| الظاء | ظَهَرَالْعِبَادَةُ وَالتَّعْظِيْمُ لِلدِّيْنِ |
| | وَجَدُّكُمْ عَبْدُ قَادِرْ مُحْيِي الدِّيْنِ |
| | مُخْتَارُ اَوَّلُهُمْ بِالْيَاءِ وَالسِّيْنِ |
| | جَرِيْئِى ذِهْنٍ اَمِيْنٍ قُطْبَ يَاسِيْنِ |
| العين | عَمَّ السَّلَامَةُ وَالْبُشْرَى لِمُعْتَبِرٍ |
| | ذُمَّ الْهِدَايَةُ وَالنَّعْمَا لِمُكْتَسِرٍ |
| | طُوْبٰى لِمَنْ صَحِبَ الْاَقْطَابَ مِنْ فَخِرٍ |
| | يَااَفْضَلَ الْاَوْلِيَا يَاقُطْبَ يَاسِيْنِ |
| الغين | غَيْبُ الْاٰلٰهِ بَدَا قَبْلَ انْتِقَالِ بِكُمْ |
| | جَاعَبْدُ قَادِرِ قُطْبِ الْمَدْهَرِيِّ بِكُمْ |
| | دَعَاكُمُ وَبِيَاقَادِرْ بِرُتْبَتِكُمْ |



| | |
|---|---|
| | وَذَاكَ تَعْظِيْمُكُمْ يَاقُطْبَ يَاسِيْنِ |
| الفاء | فَجَآءَ مَلَكٌ كَرِيْمٌ بِالسُّؤَالِ عَلَى |
| | مَقَامِ مَدْفَنِكُمْ بَلْ لَمْ تَجِبْ وَدَلَا |
| | لَاتٌ بِحُزْنٍ تُرِيْ فِيْ وَجْهِهِ وَخَلَا |
| | مِنْ عِنْدِكُمْ عَجَبًا يَاقُطْبَ يَاسِيْنِ |
| القاف | قُرْبَ الْاَصَالَةُ قَدْ جَاءَالنَّبِيُّ خِضْرْ |
| | اَخَذَالرِّدَاءَ لَهُ رَدَّى عَلَيْكُمُ غِرّ |
| | وَهٰذِهِ خِلْعَةٌ لَكَ الْحَبِيْبُ وَسُرْ |
| | فَقَالَ خِضْرٌ كَذَا يَاقُطْبَ يَاسِيْنِ |
| الكاف | كُلٌّ بِعِلْمِكُمْ نَالُوْا مُرَادَهُمُ |
| | عَجَبُوْا بِسِرِّكُمْ شَرَفًا وَزَادَهُمُ |

| | |
|---|---|
| صَفَآءُ قَلْبٍ وَصَرْيُ الطُّرْقِ فَوْزُهُمْ | |
| لَدَيْكَ رُشْدُ الْاُنَاسِ قُطْبَ يَاسِيْنِ | |
| لَوْحُ السَّمَا وَاَرَاضِيْ مِنْ ضِيَائِكُمُ | للاّم |
| شَمْسُ الْوُجُوْدِ وَنَبْعُ الْعِلْمِ مَنُّكُمُ | |
| مِنَ الْمَقَالَةِ وَالْعِرْفَانُ عَيْشُكُمُ | |
| دَامَ الْاَمَانَةُ مِنْكُمْ قُطْبَ يَاسِيْنِ | |
| مَدِيْحُ قَوْلٍ وَفِيُّ الْقَلْبِ رَاسِيَةً | لميم |
| اَمْلَاكُ تَرْحَبُ لِلتَّمْدِيْحِ قَاطِبَةً | |
| اَهْلُ السَّمَآءِ وَاَرْضِ اللّٰهِ قَآئِلَةً | |
| اَهْلاً وَسَهْلاً لَكُمْ يَاقُطْبَ يَاسِيْنِ | |
| نِعْمَ الزَّمَانُ بِبَعْثِ الْاَوْلِيَا رُتَبَا | النّون |



| | |
|---|---|
| لِلْاَنْبِيَآءِ نِيَابًا وَالْعُلٰى قُطْبَا | |
| نَصْرٌ مِّنَ اللّٰهِ قُرْبَانٌ بِنَشْرِحِبَا | |
| عَمَّ السَّعَادَةُ مِنْكُمْ قُطْبَ يَاسِيْنِ | |
| وُدِّيْ كَوَدْقٍ غَزِيْرٍ لَايُزَالُ بَدَا | الواو |
| نُوْرًا بِقَلْبِيْ بِكُمْ اَنْشَدْتَ ذَااَبَدَا | |
| اِنِّيْ بُنَيُّكُمُ اَخَذْتُكُمْ عَمَدَا | |
| عِمَادُ دِيْنِ الْالٰهِ قُطْبَ يَاسِيْنِ | |
| هَدَى مُحِبَّكُمُ اِنِّيْ مَدِيْحُكُمُ | الهاء |
| خَلِيْلُ عَوْنٍ وَاَنْتُمْ قُدْوَتِيْ بِكُمُ | |
| اَسْئَلْ اِلَى اللّٰهِ غُفْرَانًا بِفَضْلِكُمُ | |
| يَامَنْ لَنَا مَلْجَأٌ يَاقُطْبَ يَاسِيْنِ | |

| | |
|---|---|
| والالام الالف | لَاحِظْ اِلَيَّ وَاُسْرَتِكُمْ وَحِبِّكُمُ<br>اِلَى الْمُرِيْدِيْنَ وَالْخُلَفَآءِ نَجْمُكُمُ<br>اَجِرْسَقَامِيْ اَغِثْ يَاسَيِّدِيْ لَكُمُ<br>مَقَامُكُمْ بِعُلَا يَاقُطْبَ يَاسِيْنِ |
| الياء | يَارَبِّ صَلِّ وَسَلِّمَنْ عَلٰى اَحْمَدْ<br>وَالْاٰلِ وَالصَّحْبِ وَالتُّبَّاعِ وَالْاَزْيَدْ<br>بِالْعِلْمِ وَالْعَمَلِ وَالْعِرْفَانِ يَامُرْشِدْ<br>عَلَيْكُمُ بِخُصُوْصٍ قُطْبَ يَاسِيْنِ |
| الختم | اَلْحَمْدُ لِلّٰهِ شُكْرِيْ دَامَ كَالدِّيَمِ<br>لَهُ الثَّنَاءُ بِجَمٍّ شَاعَ لِلشِّيَمِ<br>تَكَثَّرَ الشَّغْفُ لِلتَّمْدِيْحِ كَالْغِيَمِ<br>نَالَ الْعُلَا بِاٰلِهٖ قُطْبَ يَاسِيْنَ |



# قَصِيْدَةُ الْاَحْمَدِيَّةِ فِيْ نَشِيْدَةِ الْعَوْنِيَّةِ

١ . اِنَّنِيْ اَنَا اَحْمَدِيْ بِمَعْنَوِيَّةِ اَحْمَدِيْ

اِنَّنِيْ اَنَا اَحَدٌ بِاَحَدِيَّةِ اَحْمَدِيْ

*( இன்னனீ அன அஹ்மதீ பி மஉனவிய்யதி அஹ்மதீ*
*இன்னனீ அன அஹதுன் பி அஹதிய்யதி அஹ்மதீ )*

1. நிச்சயமாக நான் அஹ்மதிய்ய அருத்த (தாற்பரிய)ங் கொண்ட அஹ்மதீயாக இருக்கிறேன். நான் திட்டமாக அஹ்மதிய்யத்தான அஹதிய்ய (ஏகத்துவ)த்தைக் கொண்ட அஹதா (ஒருவரா)கவும் இருக்கிறேன்.

٢ . اِنَّنِيْ اَنَا سِبْطُ الرَّسُوْلِ سَيِّدِ اَحْمَدِيْ

اِنَّنِيْ اَنَاوَارِثُ الرَّسُوْلِ سَيِّدِاَحْمَدِيْ

*( இன்னனீ அன ஸிப்துற்றஸூலி சைய்யிதி அஹ்மதீ*
*இன்னனீ அன வாரிதுற்றஸூலி சைய்யிதி அஹ்மதீ )*

2. நிச்சயமாக நான் அஹ்மதிய்ய சைய்யிதாகிய ரஸூல் நாயகம் (ஸல்) அவர்களின் திருப்பேரராக இருக்கிறேன். திட்டமாக நான் அஹ்மதிய்ய சைய்யிதாகிய ரஸூல் நாயகம் (ஸல்) அவர்களின் வாரிசாகவும் இருக்கிறேன்.

٣ . اِنَّنِيْ اَنَا كَعْبَةُ الْاٰلٰهِ لَاحَ بِاَحْمَدِيْ

اِنَّنِيْ اَنَا بَيْتُ الْمَعْمُوْرِضَآءَ بِاَحْمَدِيْ

*( இன்னனீ அன கஉபதுல் இலாஹி லாஹ பி அஹ்மதீ*
*இன்னனீ அன பைதுல் மஉமூரி ளாஅ பி அஹ்மதீ )*

3. நிச்சயமாக நான் அஹ்மதிய்யத்தால் பிரகாசித்துக் கொண்டிருக்கும் இறைவனின் இல்ல (வீடு) மாக இருக்கிறேன். திட்டமாக நான் அஹ்மதிய்யத்தால் பிரகாசித்துக் கொண்டிருக்கிற பைதுல் மஉமூராகவும் இருக்கிறேன்.

٤ . طَافَنِيْ اِنْسٌ وَاَمْلَاكُ الْاَرَاضِيْ وَالسَّمَا

طَابَ لِيْ مَعْنَى الْحَقَائِقِ بِنُوْرِ اَحْمَدِيْ

*(தாஃபனீ இன்ஸுன் வஅம்லாகுல் அராளீ வஸ்ஸமா*
*தாப லீ மஃனல் ஹகாஇகி பி நூரி அஹ்மதீ)*

**4. மனிதர்களும் வானம், பூமியின் மலக்குகளும் என்னை வலம் வருகிறார்கள். அஹ்மதிய்ய ஜோதி கொண்டு ஆத்மார்த்த கருத்துகளெல்லாம் எனக்கு மணமாயின. (தெளிவாயின.)**

٥ . زَانَ لِيْ زَيْنُ الْعِبَادَاتِ السَّمَا عُلْوًا عَلَا

قُمْتُ حَقًّا بِاِمَامِ الثَّقَلَيْنِ بِاَحْمَدِيْ

*(ஸானலீ ஸைனுல் இபாதாதிஸ்ஸமா உல்வன் அலா*
*கும்து ஹக்கன் பி இமாமிஸ்ஸகலைனி பி அஹ்மதீ)*

**5. மிக உயர்ந்த விண்ணுலக வணக்கங்களின் அலங்காரம் எனக்கு அலங்காரமளித்தது. மனு, ஜின் இரு கூட்டத்தாரின் அஹ்மதிய்ய இமாமைக் கொண்டு ஹக்காக (உண்மையாக) நிலை பெற்றேன்.**

٦ . طَارَ اَعْلَامِيْ عُلَا شَمَمِ الْجِبَالِ الشُّبَّنِ

لِيْ عَلَامَاتٌ بِوَحْدَةِ بِحُرْمَةِ اَحْمَدِيْ

*(தார அஉலாமீ உலா ஷமமில் ஜிபாலிஷ்ஷப்னி*
*லீ அலாமாதுன் பிவஹ்ததின் பிஹுர்மதி அஹ்மதீ)*

**6. என்னுடைய கொடிகள் செழிப்பான மிக உயர்ந்த மலைகளில் பறந்தன. அஹ்மதிய்ய சங்கை கொண்டு (வஹ்தத்தின்) ஏகத்துவத்தின் அடையாளங்கள் எனக்கு இருக்கின்றன.**



٧ . دُقَّتِ الطُّبُوْلُ فِيْ نَوَاحِيْ اَرْضٍ وَالسَّمَا

لِعُلُوِّ رُتْبَتِيْ دَائِمَةً بِاَحْمَدِيْ

*(துக்கதித் துபூலு ஃபீ நவாஹீ அர்ளின் வஸ்ஸமா*
*லிஉலுவ்வி ருத்பதீ தாஇமதன் பி அஹ்மதீ)*

**7. அஹ்மதிய்யாவைக் கொண்டு வானம், பூமியுடைய எல்லாத் திக்குகளிலும் நிலையான எனது உயர் பதவி(க்காகப்) பறைசாற்றப்பட்டது.**

٨ . كُنْتُ اَوْحَدًا وَّفَرْدًا نَادِرًا وَّاَمْجَدًا

بِاِمَامَةٍ بِتَصْرِيْفِ حُكُوْمَةِ اَحْمَدِيْ

*(குன்து அவ்ஹத(ன்)வ் வஃபர்த(ன்)ன் நாதிர(ன்)வ்வ அம்ஜதன்*
*பி இமாமதின் பிதஸ்ரீஃபி ஹுகூமதி அஹ்மதீ)*

**8. நான் அஹ்மதிய அரசாங்க நிர்வாகத்தின் தலைமைத்தனத்தில் ஒப்பற்றவராகவும் தனித்தவராகவும் அபூர்வமானவராகவும் இருக்கிறேன்.**

٩ . كُنْتُ شَيْخًا كَامِلًا وَّسَيِّدًا وَّهَادِيًا

دَاعِيًا اَعْلٰى مَرَاتِيْبِ حَقِيْقَةِ اَحْمَدِيْ

*(குன்து ஷைகன் காமில(ன்)வ் வஸய்யித(ன்)வ் வஹாதியா*
*தாஇயன் அஉலா மராதீபி ஹகீகதி அஹ்மதீ)*

**9. நான் காமிலான ஷைகாகவும் தலைவராகவும் நேர்வழி காட்டுபவராகவும் இருக்கிறேன். நான் அஹ்மதிய்ய உள்ளமையின் உயரிய தகுதிகளை பிரச்சாரம் செய்கிறவராகவும் உயரிய தரங்களளவில் அழைக்கிறவராகவும் இருக்கிறேன். (அல்லது நான் அஹ்மதிய்ய உள்ளமையின் உயரிய தரங்களளவில் அழைக்கிறவராகவும் இருக்கிறேன்.)**

١٠. طَارَ فِى السَّمَا عُلُوًّا لاَتُدَارِكُ الْبَصَرُ
خُذْتُ لُؤْلُؤَ الْمَعَالِيْ مِنْ بِحَارِ اَحْمَدِيْ

*(தார ஃபிஸ்ஸமா உலுவ்வன் லா துதாரிகுல்பஸர்*
*குத்து லுஉலுஅல் மஆலீ மின் பிஹாரி அஹ்மதீ)*

10. பார்வைக்கு எட்டாத உயர்ந்த வானத்தில் பறந்தேன். அஹ்மதிய சமுத்திரங்களிலிருந்து உயரிய முத்துக்களை எடுத்தேன்.

١١. ذَاقَ لِيْ زَمَنِى الْعُلٰى وَنَارَلِيْ نَجْمُ السَّمَا
طَلَعَتِ الشَّمْسُ الْوُجُوْدُ وَالْبُدُوْرُ بِاَحْمَدِيْ

*(தாக லீ ஸமனில் உலா வ நாற லீ நஜ்முஸ்ஸமா*
*தலஅதிஷ் ஷம்ஷுல் வுஜூது வல்புதூறு பி அஹ்மதீ)*

11. உயர்வுமிக்க எனது காலம் எனக்கு இன்பமாயது. வானத்தின் நட்சத்திரம் எனக்காகப் பிரகாசித்தது. அஹ்மதிய்யாவைக் கொண்டு உள்ளமையின் சூரியனும் சந்திரனும் (சந்திரர்களும்) உதயமாயின.

١٢. لاَحَ زَمَنِيْ مِنْ حُضُوْرِيْ طَابَ وَقْتِىْ بِالْعَمَلِ
فَاحَ عِلْمِيْ كُلَّ حِيْنٍ مِنْ فُيُوْضِ الْاَحْمَدِيْ

*(லாஹ ஸமனீ மின் ஹுளூரீ தாப வக்தீ பில் அமல்*
*ஃபாஹ இல்மீ குல்ல ஹீனின் மின்ஃபுயூளில் அஹ்மதீ)*

12. எனது வருகையால் எனது காலம் ஜொலித்தது. வணக்கம் (நற்செயல்களைக்) கொண்டு எனது நேரம் மணம்பெற்றது. அஹ்மதிய்ய அருள்களால் எல்லா நேரங்களிலும் எனது அறிவு நறுமணம் வீசியது.



١٣. كُنْتُ سِيْنًا وَهَوَاءً ثُمَّ نَارًا مَعَ نُوْرٍ
مَاءً وَالتُّرَابَ مِنْهَا نَوِّرْ شَبْحَ اَحْمَدِيْ

*(குன்து ஸீனன் வஹவாஅன் தும்ம நாரன் மஅ நூர்*
*மாஅன் வத்துராப மின்ஹா நவ்விர் ஷப்ஹ அஹ்மதீ)*

13. ஆகாயமாகவும் காற்றாகவும் நெருப்பாகவும் ஜோதியாகவும் நீராகவும் மண்ணாகவும் இருக்கிறேன். அவற்றிலிருந்து அஹ்மதிய பிம்பமாக உள்ளேன்.

١٤. كُنْتُ مِنْ عُلُوْمٍ وَالْعُلُوْمُ مِنْ اِرَادَةٍ
ذَاكَ مِنْ دُرَّةِ الْبَيْضَا ذَاكَ اَصْلُ الْاَحْمَدِيْ

*(குன்து மின்உலூமின் வல்உலூமு மின் இராததின்*
*தாக மின்துற்றதில் பைளா தாக அஸ்லுல் அஹ்மதீ)*

14. நான் அறிவுகளில் நின்றுமுள்ளேன். அறிவுகள் நாட்டத்தில் நின்றுமுள்ளவை. அது வெண்முத்தில் நின்றுமானது. அதுவே அஹ்மதிய்ய அஸ்லாகும். (தாற்பரியமாகும்.)

١٥. وَمِنْ دُرَّةِ الْبَيَاضِ بَانَ مَاءُ الطُّهْرِ
وَمِنَ الْمَا مَوْجٌ كُلُّ اَشْيَا بِاَحْمَدِيْ

*(வமின் துற்றதில் பயாளி பான மாஉத்துஹ்ர்*
*வமினல் மா மவ்ஜுன் குல்லு அஷ்யா பிஅஹ்மதீ)*

15. அந்த வெண் முத்துக்களிலிருந்தே பரிசுத்த நீர் வெளியாயிற்று. அந்த நீரிலிருந்தே அலைகள் வெளியாயின. எல்லாப் பொருள்களும் அஹ்மதிய்யத்தைக் கொண்டே ஆயின.

١٦. وَمِنْ مَوْجٍ زَبَدٌ مِنْ زَبَدٍ ثُمَّ التُّرَابْ

اٰدَمٌ مِنَ التُّرَابِ اَصْلُ اِنْسِ الْاَحْمَدِيْ

*(வமின் மவ்ஜின் ஸபதுன் மின்ஸபதின் தும்மத்துராப்*
*ஆதமுன் மினத்துராபி அஸ்லு இன்ஸில் அஹ்மதீ)*

16. அலையிலிருந்து நுரையும் நுரையிலிருந்து மண்ணுமாகும். அஹ்மதிய்ய மானிட (அஸ்லாகிய) தாற்பரியமாகிய ஆதம் (அலை) மண்ணிலிருந்து வந்தவர்களே.

١٧. كُنْتُ كُلِّيًّا وَجَوْهَرًا وَمُطْلَقًا وَّبَعْ

دُ نَامِيًا حَيَوَانًا اِنْسًا فِيْ مَرَاتِبِ اَحْمَدِيْ

*(குன்து குல்லிய்யன் வஜவ்ஹரன் வ முத்லக(ன்)வ் வபஃ*
*து நாமியன் ஹயவானன் இன்ஸன் ஃபீ மராதிபி அஹ்மதீ)*

17. அஹ்மதிய்ய தரங்களின்படி நான் சர்வமாகவும் மூலமாகவும் மொத்தமாகவும் தாவரமாகவும் ஜீவராசியாகவும் மனுவாகவும் இருக்கிறேன்.

١٨. غَابَ لَيْلَةُ الدُّجٰى عِنْدَ طُلُوْعِهَا وَزَا

لَ بِهَا غَيٌّ وَغَاوٍ ذَاكَ اَصْلُ الْاَحْمَدِيْ

*(காப லைலதுத்துஜா இந்த துலூஇஹா வஸா*
*ல பிஹா கய்யுன் வ காவின் தாக அஸ்லுல் அஹ்மதீ)*

18. வஹ்ததுல் வுஜூதாகிய ஏகாந்த உள்ளமை உதயமான போது காரிருள் மறைந்தது. அதனால் இயலாமையும் வழிகேடும் நீங்கின. அதுவே அஹ்மதிய்ய மூலமாகும். (தாற்பரியமாகும்.)



١٩. سَرَّسِرِّيْ فِيَّ قَلْبِيْ عَرْشُ رَبِّ الْاَحَدِ

كُنْتُ سُلْطَانَ الْعَوَالِمِ لِلزَّمَانِ بِاَحْمَدِيْ

*(ஸர்ர ஸிர்ரீ ஃபிய்ய கல்பீ அர்ஷு ரப்பில் அஹதி*
*குன்து சுல்தானல் அவாலிமி லிஸ்ஸமானி பி அஹ்மதீ)*

19. என்னில் உள்ள என் இரகசியங்கள் அந்தரங்கமானவை. எனது கல்பு, தனித்தவனாகிய இரட்சகனின் சிம்மாசனம். அஹ்மதிய்யாவைக் கொண்டு அகிலத்துக்கு (இக்) காலத்தின் அதிகாரியாக இருக்கிறேன்.

٢٠. كُنْتُ يَعْلُوْلاً عَلٰى مَآءٍ وَمَوْجًا فِيْ بِحَا

رٍ وَحُكْمُ الظَّاهِرِيَّةِ كَالْحَقِيْقَةِ اَحْمَدِيْ

*(குன்து யஉலூலன் அலா மாஇன் வமவ்ஜன் ஃபீபிஹா*
*ரின் வஹுக்முள் ளாஹிரிய்யதி கல்ஹகீகதி அஹ்மதீ)*

20. யான் நீரின் மேற்குமிழாகவும் சமுத்திரங்களில் உள்ள அலையாகவும் உள்ளேன். அஹ்மதிய்ய தாற்பரியம் போன்றதே வெளியானவற்றின் தீர்ப்பும்.

٢١. كُنْتُ ثَلْجًا جَامِدًا مِنْ عَقْدِ مَآءِ الْمَيْعِ ثُمَّ

انْصِرَافِيْ كَالْحَقِيْقَةِ مَآءِ عَذْبِ الْاَحْمَدِيْ

*(குன்து தல்ஜன் ஜாமிதன் மின் அக்தி மாஇல்மைஇ தும்ம*
*ன்ஸிரா ஃபீ கல்ஹகீகதி மாஇ அதுபில் அஹ்மதீ)*

21. யான் இளகிய நீரில் ஏற்படும் உறைவினால் உண்டான உறைந்த பனிக்கட்டியாவேன். பின்பு எனது மாற்றம் அஹ்மதிய்ய இனிய நீராகிய எதார்த்தத்தைப் போன்றதாகும்.

٢٢. اَنِّيْ اَنَا قِبْلَةٌ مَنْ رَامَ نَحْوِيْ لِلْمُنٰى

نَادِيًا بِاسْمِ الْخَلِيْلِ نَالَ حَظَّ الْاَحْمَدِيْ

*(இன்னனீ அன கிப்லதுன் மன்ராம நஹ்வீ லில் முனா*
*நாதியன் பிஸ்மில் கலீலி நால ஹள்ளல் அஹ்மதீ)*

22. தேவை (விருப்பங்)களுக்காக எம்மை (எம்பக்கம்) நாடுகிறவர்களுக்கு நிச்சயமாக நான் கிப்லாவாக (முன்னோக்கும் தானமாக) இருக்கிறேன். "கலீல்" என்னும் நாமத்தை அழைக்கிறவர் அஹ்மதிய்ய பேற்றை (அதிருஷ்டத்தை) அடைந்தவராவார்.

٢٣. مَنِ اقْتَدٰى بِيْ فِى الدُّنَا وَالْاُخْرَوِيَّةِ نَالَ بِيْ

حَظًّا اَعْلٰى رُتْبَةً وَنِعْمَةً بِاَحْمَدِيْ

*(மனிக்ததாபீ ஃபித்துனா வல் உக்ரவிய்யதி நால பீ*
*ஹள்ளன் அஉலா ருத்பத (ன்) வ் வநிஉமதன் பி அஹ்மதீ)*

23. என்னைப் பின்பற்றியவர்கள் இம்மையிலும் மறுமையிலும் அஹ்மதிய்யாவைக் கொண்டு பேற்றினையும் உயர் தரங்களையும் பாக்கியத்தையும் பெற்றுக் கொள்வர்.

٢٤. مَنْ نَدٰى بِيْ غَارَةً لِلضِّيْقِ عِنْدَ التَّعَبِ

يَاخَلِيْلُ عَوْنٍ وَّعَوْنُهُ يَجِيْئُ بِاَحْمَدِيْ

*(மன்நதா பீ காரதன் லிள்ளைகி இன்தத் தஅபி*
*யாகலீல் அவ்னி(ன்)வ் வஅவ்னுஹூ எஜீஉ பி அஹ்மதீ)*

24. கஷ்டத்தின் நெருக்கடியில் "யாகலீல் அவ்ன்" என உதவி தேடி அழைப்பவருக்கு அஹ்மதிய்யாவைக் கொண்டு அவருடைய உதவி வந்தடையும்.



٢٥. لِيْ خِيَامٌ عِنْدَ قَلْبِ لِلْمُرِيْدِ الْمُخْلِصِ

وَاَحِبَّاءُ الْحَمِيْمِ رَاشِدًا بِاَحْمَدِيْ

*(லீ கியாமுன் இன்த கல்பின் லில் முரீதில் முக்லிஸி*
*வ அஹிப்பாஉல் ஹமீமி ராஷிதன் பி அஹ்மதீ)*

25. கலப்பற்ற முரீதுகளின் உள்ளத்திலே எனக்குக் கூடாரம் உண்டு. அஹ்மதிய்யாவைக் கொண்டு நெருங்கிய நண்பர்கள் அன்பர்கள் உணர்வு பெற்றார்கள்.

٢٦. نَارَ نُوْرِيْ حِيْنَ حَانَ نُوْرُ اَحْمَدِ الْاَحَدِ

كُنْتُ آدَمًا وَنُوْحًا بِحَقِيْقَةِ اَحْمَدِيْ

*(நார நூரீ ஹீன ஹான நூரு அஹ்மதில் அஹதி*
*குன்து ஆதமன் வநூஹன் பி ஹகீகதி அஹ்மதீ)*

26. அஹதுடைய (ஏகத்துவ) அஹ்மதின் பிரகாசம் ஆனபோது எனது ஜோதி பிரகாசித்தது. அஹ்மதிய்ய தாற்பரியங்கொண்டு நான் ஆதமாகவும் நூஹாகவும் ஆனேன்.

٢٧. كُنْتُ اِبْرَاهِيْمَ اِسْمَاعِيْلَ مُوْسٰى ذَالْكِفْلِ

يُوْسُفَ اِسْحَاقَ وَيَعْقُوْبَ بِاَصْلِ اَحْمَدِيْ

*(குன்து இப்றாஹீம இஸ்மாயீல மூஸா தல் கிஃப்லி*
*யூசுஃப இஸ்ஹாக வ எஉகூப பி அஸ்லி அஹ்மதீ*

27. அஹ்மதிய மூலாதாரங் கொண்டு நான் இப்றாஹீமாகவும் இஸ்மாயீலாகவும் மூஸாவாகவும் துல்கிஃப்லாகவும் யூசுஃபாகவும் இஸ்ஹாககவும் யஉகூபாகவும் ஆனேன்.

٢٨. كُنْتُ كُلاًّ وَبِكُلِّ كُنْتُ جَمًّا وَبِجَمْعٍ
كُنْتُ فَرْدًا وَافِرًا بِاَحَدِيَّةِ اَحْمَدِيْ

*(குன்து குல்லன் வபி குல்லின் குன்து ஜம்மன் வபிஜம்இன்*
*குன்து ஃபர்தன் வாஃபிரன் பி அஹதிய்யதி அஹ்மதீ)*

28. அனைத்தைக் கொண்டும் அனைத்தானேன். சர்வத்தைக் கொண்டும் நிறைந்தேன். யான் அஹ்மதிய்ய தனித்துவத்தைக் கொண்டு விரிந்து தனித்த (ஒப்பற்ற)வனானேன்.

٢٩. كُنْتُ قُطْبًا فِيْ عَمىً مَعَ اَحْمَدِيَّةِ الْاَحَدِ
مَعِيْ مُحِيُّ الدِّيْنِ غَوْثِيْ عِنْدَ رُتْبَةِ اَحْمَدِيْ

*(குன்து குத்பன் ஃபீ அமா மஅ அஹ்மதிய்யதில் அஹத்*
*மஈ முஹிய்யுத்தீனி கவ்தீ இன்த ருத்பதி அஹ்மதீ)*

29. யான் ஏக அஹ்மதிய்யாவுடனே நிராமயத்திலே குத்பாக இருந்தேன். என் இரட்சகர் முஹிய்யுத்தீன் அவர்கள் அஹ்மதிய்ய தரத்திலே என்னுடன் இருக்கிறார்கள்.

٣٠. كُنْتُ مَعَ رَسُوْلِيْ وَهُوَجَدِّيَ الْاَعْظَمِ فِى الرُّ
تْبَةِ الْمِعْرَاجِ اَفْنَيْتُ بِرَبِّ الْاَحْمَدِيْ

*(குன்து மஅ ரஸூலீ வஹுவ ஜத்தியல் அஉளமி ஃபிர்*
*ருத்பதில் மிஉராஜி அஃப்னைது பிரப்பில் அஹ்மதீ)*

30. மிஉராஜூ என்னும் உயர்வின் மாட்சிமை பொருந்திய தரத்திலே என் பாட்டனார் ரஸூல் (ஸல்) அவர்களுடன் இருந்தேன். அஹ்மதிய்ய இரட்சகனில் என்னை அழித்தேன். (பனாவாக்கினேன்.)



٣١. كُنْتُ مَعَ جَدِّيْ مُحِيِّ الدِّيْنِ فِيْ رَحْمِ الرِّضَا
كُنْتُ غَوْثًا لِلْاَنَامِ لِحِمَايَةِ اَحْمَدِيْ

*(குன்து மஅ ஜத்தீ முஹிய்யித்தீனி ஃபீரஹ்மிர்ரிளா*
*குன்து கவ்தன் லில் அனாமி லிஹிமாயதி அஹ்மதீ)*

31. பொருத்தத்தையுடைய கருப்பவறைக்குள் எனது பாட்டனார் முஹிய்யுத்தீன் ஆண்டகை அவர்களுடன் இருந்தேன். அஹ்மதிய்ய பாதுகாப்பிற்காக மக்களின் இரட்சகராக ஆனேன்.

٣٢. صَلِّ سَلِّمْ وَارْضَ عَنِّيْ بِالْهِدَايَةِ وَالرُّشْدِ
خُذْبِيَ الْمَعَاشَ بِالدُّنَا وَاُخْرٰى اَحْمَدِيْ

*(ஸல்லி ஸல்லிம் வர்ள அன்னீ பில்ஹிதாயதி வற்றுஷ்தி*
*குத் பியல் மஆஷ பித்துனா வஉக்ரா அஹ்மதீ)*

32. ஸலவாத்தும் ஸலாமும் சொல்வாயாக. என்னை நேர்வழி கொண்டும் சன்மார்க்கங் கொண்டும் பொருந்திக் கொள்வாயாக. அஹ்மதிய்ய இம்மை, மறுமையின் ஜீவியத்தைப் பிரகாசிக்கச் செய்வாயாக.

(تــمّت بعون الله)

ياحق

# القصيدة العونيّة

فى

# توحيد الاحــمديّة

(அல்லது)

## ஆதிஞான ஈதற் பிரபந்தம்

هذه فيض من اللّٰه وواردات من الالهية لسيّدالاوان

وامام الزّمان وغوث الامان وقطب الاعيان

السيدخليل عون الهاشمى ابن قطب الاقطاب

غوث الاعظم السيد يس الهاشمى

(குத்புஸ்ஸமான் ஷம்ஷுல் வுஜூத் ஜமாலியா ஸய்யித் கலீல் அவ்ன் அல்ஹஸனிய்யுல் ஹாஷிமிய் மௌலானா நாயகமவர்களால் திருவாய் மலர்ந்தருளப்பட்டட தேவாமிர்த ஞானக்கோவை.)



١. بِاسْمِ الْمَوْجُوْدِ بِالْوُجُوْدِ قَدِيْمَا

تَمْزِيْجًا كُنَّا مَحْضَ عَيْنٍ عَدِيْمَا

(பிஸ்மில் மௌஜூதி பில் வுஜூதி கதீமா
தம்ஸீஜன் குன்னா மஹ்ள ஐனின் அதீமா)

ஆதியாம் காட்சி தன்னில் தெளிவாய்க் கலந்தே
பேதமில்லாப் பெருநாமம் நாம் கொண்டதாமே.

٢. حَمْدُالْمَقَامِ بِالشُّهُوْدِ كَمَالاً

غَيْرَ جُزْءٍ وَفَرْقٍ كُنَّا فَخِيْمَا

(ஹம்துல் மகாமி பிஷ்ஷுஹூதி கமாலா
கைர ஜுஸ்இன் வஃபர்கின் குன்னா பகீமா

பிரிவுஞ்சினையும் இன்றிய பூரணக் காட்சி
பெருமைப் பொருளான நமது புகழ்தானமாமே.

٣. صَلٰوةٌ مَعْ سَلاَمٍ مَنْ جَآءَ فِيْنَا

نُوْرًا بِتَوْحِيْدِ الْكَمَالِ حَزِيْمَا

(ஸலாதுன் மஉ ஸலாமின் மன் ஜாஅ ஃபீனா
நூரன் பிதௌஹீதில் கமாலி ஹஸீமா)

நம்மில்தாமான முத்தித் தனிசோதியான
விம்முஞ்சுடருக்குக் கருணை ஈடேற்றமாமே.

٤. كُنَّا لَيْلاً نَهَارًا ضِدًّا وَنِدًّا ،

مَاشَهِدْنَا فِى السَّمَا اَرْضٍ حَتِيْمَا ،

*(குன்னா லைலன் நஹாரன் ளித்தன் வநித்தா*
*மாஷஹித்னா ஃபிஸ்ஸமா அர்ளின் ஹதீமா)*

**இரவும் பகலாய் எதிர்வோடு நிகரும் நாமாகி**
**விரிவான் புவியின் நிறைகாட்சி நாம் கொண்டதாமே.**

٥. كُنَّا بَدْرًا وَّشَمْسًا لَيْلاً نَهَارًا

بَيْنَ السَّمَا وَالْاَرْضِ نُوْرًا مُقِيْمًا

*(குன்னா பத்ர(ன்)வ் வஷம்ஸன் லைலன் நஹாரா*
*பைனஸ்ஸமா வல் அர்ளி நூரன் முகீமா)*

**இரவும் பகலும் ஒளிர்க்கின்ற மதியுஞ் சுடராகி**
**பருவான் புவியின் இடைகோளும் பரஞ்சோதி நாமே.**

٦. كُنَّا حَيًّا فِيْ حَيِّ السَّمَا وَاَرْضٍ

مِنْ ذَرَّاتٍ حَتّٰى جِبَالٍ عَظِيْمَا

*(குன்னா ஹய்யன் பீஹய்யிஸ்ஸமா வஅர்ளின்*
*மின் தர்ராதின் ஹத்தா ஜிபாலின் அளீமா)*

**விண்ணில் புவியில் அணுமுதலாய் மலையாதியான**
**எண்ணில் உயிர்க்கும் நாமாதி சிவசீவமாமே.**



٧. كُنَّا دَهْرًا نَهَارًا بَرًّا بِحَارًا

فِيْ دَاخِلِ الْبِحَارِ دُرًّا يَتِيْمَا

*(குன்னா தஹ்ரன் நஹாரன் பர்ரன் பிஹாரா*
*ஃபீதாகிலில் பிஹாரி துர்ரன் யதீமா)*

**காலம் நாமே பகலோடு கடலும் கரைநாம்**
**சூழும் கடலின் கீழ்முத்தும் நாமாகினோமே.**

٨. كُنَّا عَنَاصِيْرًا سَرٰى سِرٌّ سِرٍّ

فِيْ قَلْبِ عَرْشِنَا دَوَامًا قَوِيْمَا

*(குன்னா அனாஸீரன் ஸரா ஸிர்ரு ஸிர்ரின்*
*ஃபீ கல்பி அர்ஷினா தவாமன் கவீமா*

**பூதங்களாகியகச் சிம்மாசனத்தில்**
**ஆதியினந்தரங்கம் நடந்தேறுமாமே**

٩. اَفْنٰى وُجُوْدِيْ فِيْ وُجُوْدٍ قَدِيْمٍ

لَاحَ جِسْمِيْ مِنْ نُوْرِ نُوْرٍ وَسِيْمَا

*(அஃப்னா வுஜூதீ ஃபீவுஜூதின் கதீமின்*
*லாஹ ஜிஸ்மீ மின்நூரி நூரின் வஸீமா)*

**ஆதியுண்மையினில் நம்முண்மையழித்தே**
**சோதியில் நம் அங்கங்கள் பிரகாசமாமே.**

١٠. كُنَّا مَيْتًا فِيْ حَالِ جِسْمِيْ جَلاَ فِيْ
رُوْحِنَا حَقٌّ كُنَّا حَيًّا كَسِيْمَا

*(குன்னா மைதன் ஃபீஹாலி ஜிஸ்மீ ஜலாஃபீ*
*ரூஹினா ஹக்குன் குன்னா ஹய்யன் கஸீமா)*

**உடல் கொண்டுலவும் நிலையினிலிறந்தேகமாகி**
**சுடராம் நமதாவிதன்னில் உயிராதல் நாமே.**

١١. نَحْنُ جِسْمًا وَّرُوْحًا سَمَا وَاَرْضًا
حَقٌّ حَقًّا سُبْحَانِيْ حَتْمًا فَهِيْمَا

*(நஹ்னு ஜிஸ்ம(ன்)வ் வரூஹன் ஸமா வஅர்ளன்*
*ஹக்குன் ஹக்கன் ஸுப்ஹானீ ஹத்மன் ஃபஹீமா.)*

**உடலாவிதம்மினாலும் விண்மண்ணினாலும்**
**திடமாய் நம்மில் நாமான நம்சத்தியாமே.**

١٢. اَنَّنَا ضَوْءُ الشَّمْسِ بَدْرٌ نُجُوْمٌ
ذَوَاتُهُنَّ مُطْلَقًا شَارَ سِيْمَا

*(இன்னனா ளெஉஷ் ஷம்ஸி பத்ருன் நுஜூமுன்*
*தவாதுஹுன்ன முத்லகன் ஷார ஸீமா)*

**பரிதிதானாய் மதியுற்கைதம்மில் தாமாகி**
**விரிசோதியும் நாமாதல் நம்தத்துவமாமே.**



١٣. اِنَّمَا نَحْنُ فِى السُّكُوْتِ قَدِيْمَا
وَجَرٰى نَحْوَ سَبْعٍ صَرْفًا جَسِيْمَا

*(இன்னமா நஹ்னு ஃபிஸ்ஸுகூதி கதீமா*
*வஜரா நஹ்வ ஸப்இன் ஸர்ஃபன் ஜஸீமா)*

**ஆதியிற் சூனியத்தின் அமைவாக நின்று**
**ஓதும் ஏழில் நாமாக உருப்பெற்றுள்ளோமே.**

١٤. اِنَّنَا فِى الشُّئُوْنِ لَيْلاً نَهَارًا
مِنْ سَبْعِ عَالَمِنَا دَوْمًا عَوِيْمَا

*(இன்னனா ஃபிஷ்ஷுஊனி லைலன் நஹாரா*
*மின் ஸப்இ ஆலமினா தௌமன் அவீமா)*

**இரவிற் பகலில் நம்முலகேழ் தம்மில் எப்போழ்தும்**
**பரவிப் புரியும் செயல்தன்னில் செயலாகினோமே.**

١٥. لَسْنَا عُيُوْبًا غُيُوْبًا كُلَّ شَكٍّ
بَاعَدَ شَيْطَانُنَا ذَاكَ الْوَهِيْمَةَ

*(லஸ்னா உயூபன் குயூபன் குல்ல ஷக்கின்*
*பாஅத ஷைதானுனா தாகல் வஹீமா)*

**கறையால் மறைவால் சந்தேகக் குறையாவும் இன்றி**
**உறையும் பகைகள் நம்மையே நீங்கிற்றுதாமே.**

١٦. حَيْثُ صِرْنَا حَقًّا بِسِرٍّ سَرٰى فِيْ

لَاالنَّارُ وَالْجَنَّةُ قَصْدِيْ شَكِيْمَا

*(ஹைது ஸிர்னா ஹக்கன் பிஸிர்ரின் ஸராஃபீ*
*லன்னாரு வல்ஜன்னது கஸ்தீ ஷகீமா)*

**உண்மைச் சத்தா யிரகசியம் நம்மில் நிறையப்**
**பன்னும் சுவர்க் கநரகம் நமக்கின்மையாமே.**

١٧. وَشَهِدْنَا فِيْ كُلِّ كُلٍّ كَمَالاَ

فِيْنَا الشَّهَادَةُ لِكُلٍّ ضَمِيْمَا

*(வஷஹித்னா ஃபீகுல்லி குல்லின் கமாலா*
*ஃபீனஷ்ஷஹாதது லிகுல்லின் ளமீமா)*

**யாவற்றிலும் நாமாதி பூரணக்காட்சி**
**யாவும் நம்மில் தோன்றிடல் பூரணமாமே.**

١٨. وَلَنَا فِى السَّمَآءِ وَالْاَرْضِ وَالْمَا

جُنُوْدُ قَوْمِنَا عَظِيْمًا عَلِيْمَا

*(வலனா ஃபிஸ்ஸமாஇ வல் அர்ளி வல்மா*
*ஜுனூது கௌமினா அளீமன் அலீமா)*

**விண்ணில் மண்ணில் நீரினில் நமக்குண்டு வீரர்**
**எண்ணில் வலியார் நம்படையில் வீரர்களாமே.**



١٩. وَاسْتَسَرْنَا مُلْكَ فِيْ كُلِّ الْمُلُوْكِ

وَخَفَيْنَا وُزَرَآءَ نَاجٍ حَتِيْمَا

*(வஸ்தஸர்னா முல்க ஃபீ குல்லில் முலூகி*
*வகஃபைனா வுஸராஅ நாஜின் ஹதீமா)*

**அரசர் தம்மில் நம்மாட்சி நம் காரியத்தர்**
**மறைவாயிருந்தே அரசோச்சும் நாமாதியாமே.**

٢٠. فِيْ مُلْكِنَا مِنَ الصِّفَاتِ جَلَالٌ

وَجَمَالٌ مِنَ الْجَلَآءِ هَمِيْمَا

*(ஃபீ முல்கினா மினஸ்ஸிஃபாதி ஜலாலுன்*
*வஜமாலுன் மினல்ஜலாஇ ஹமீமா)*

**தட்ப வெப்பப் பண்புகள் நம்மாட்சிப்பண்பாம்**
**மட்டில்லா மாண்புமே நம் முயராட்சியாமே.**

٢١. وَطَلَعْنَا جَيْلَانَ وَالْكِرْكَرَانَا

وَكَرَّرْنَا سَيْلَانَ بَلْقَامَ خِيْمَا

*(வதலஉனா ஜைலான வல்கிர்கரானா*
*வகர்ரர்னா ஸைலான பல்காம கீமா)*

**பகுதாதில் பாரதத்தில் ஈழத்திலொன்றாய்**
**ஜகத்தினில் மாறிமாறி உதயங்கொள்வோமே.**

٢٢. وَقَرَّرْنَا قَادِرًا بِاسْمِ الْخَلِيْلِ

عَوْنِ الْهِدَايَةِ مَقَامًا مُدِيْمَا

*(வகர்ரர்னா காதிரன் பிஸ்மில் கலீலி*
*அவ்னில் ஹிதாயதி மகாமன் முதீமா)*

**கலீலெளனென்ற நாமத்தில் காதிராகி**
**நிலையான நேர்நெறியாகி நிறைகொண்டுளோமே.**

٢٣. اَعْدَآءُ الْحَقِّ مِنَ الْجُهَلَآءِ مِنْ بَعْ

ضِ الْعُلَمَآءِ اَنْكَرُوْنَا نَمِيْمَا

*(அஉதாஉல் ஹக்கி மினல் ஜுஹலாஇ மின்பஉ*
*ளில்உலமாஇ அன்கரூனா நமீமா)*

**கற்றார் கல்லாதோர் தம்மில் இறையின் பகைகள்**
**முற்றும் நம்மை முரணாகத் தூசிப்பராமே.**

٢٤. اَعْدَآئُنَا لَدَيْنَا كَبُّوْا وُجُوْهًا

اَهْلَكْنَا الْقَوْمَ مِنْهُمْ بَعْضًا ذَمِيْمَا

*(அஉதாஉனா லதைனா கப்பூ வுஜூஹன்*
*அஹ்லக்னல் கௌம மின்ஹும் பஉளன் தமீமா)*

**நம் பகைகள் நம் முன்னர் கைசேதமாவர்**
**தம்மீதிழிவும் ஒரு கூட்டம் அழிவேற்குமாமே.**



٢٥. فِيْ سِرِّ عَيْشِنَا وَاِعْلَانِنَا مَنْ

مَدَحَنَا نَالَ عَلاً عُلُوًّا نَعِيْمَا

*(ஃபீஸிர்ரி ஐஷினா வஇஉலானினா மன்*
*மதஹனா நால அலா உல்வன் நஈமா)*

**நம்வாழ்வினந் தரங்கம் பகிரங்கம் தம்மில்**
**நம்மைப் புகழ்வோர் நனியுயர்வு பெறுவார்களாமே.**

٢٦. مَنْ حَبَّنَا مِنَ الْمَقَالِ وَبَذْلِ الْ

مَالِ نَفْسًا نَالَ مَقَامًا جَزِيْمَا

*(மன் ஹப்பனா மினல் மகாலி வபதுலில்*
*மாலி நப்ஸன் நால மகாமன் ஜஸீமா)*

**சொல்லாற் பொருளால் தம்மாலும் நம்மை உகப்போர்**
**கொள்ளும் நிலைதான் குறைவின்றி நிறைவாகுமாமே.**

٢٧. وَحَفِظْنَا مُرِيْدَنَا مِنْ كَبِيْرٍ

وَصَغِيْرٍ وَمَرْضِ قَلْبٍ كَلِيْمَا

*(வஹஃபிள்னா முரீதனா மின் கபீரின்*
*வஸகீரின் வமர்ளி கல்பின் கலீமா)*

**சிறிதாம் பெரிதாம் பாபங்கள் உள்ளக்குறைகள்**
**எறிவோம் நம்மை நாடிடும் நல்லார்க்குதாமே.**

٢٨.   نَحْنُ قُلْنَا مُرِيْدَنَا بِالْوِصَالِ

اَلْوَصْلُ فِيْنَا وَصْلُ اَصْلٍ ضَمِيْمَا

*(நஹ்றனு குல்னா முரீதனா பில் விஸாலி*
*அல்வஸ்லு ஃபீனா வஸ்லு அஸ்லின் ளமீமா)*

**பக்தர்க்கு நாம் கூறிடல் ஒன்றித்தலொன்றாம்**
**முத்திப்பேறும் நம்மிலே ஒன்றித்தலாமே.**

٢٩.   نَحْنُ قُلْنَا بِالْوَصْلِ طَيْرَانَ ضَيْمٍ

وَعَدَمْنَا بِالْوَصْلِ نَارًا جَحِيْمَا

*(நஹ்றனு குல்னா பில் வஸ்லி தைரான ளைமின்*
*வஅதம்னா பில் வஸ்லி நாரன் ஜஹீமா*

**நம்மிலொன்றித்தபோது பாபங்கள் நீங்கும்**
**நம்மைச் சேரும் பக்தர்க்கு நரகில்லதாமே.**

٣٠.   سَلِ الْمُرَادَ بِنَا مِنَّا جَوَابٌ

كُنَّا مُجِيْبًا كُلَّ ذَاتٍ طَعِيْمَا

*(ஸலில் முராத பினா மின்னா ஜவாபுன்*
*குன்னா முஜீபன் குல்ல தாதின் தஈமா)*

**நம்மை வேண்டும் பக்தர்க்குப் பதிலெம்மிடத்தே**
**நம்மைத் தேட்டங்கொள்வோர்க்குப் பதிலாகினோமே.**



٣١.   لَسْنَا جَوَابًا مَنْ لاَصَفَاءُ قَلْبٍ

صَارُوْا بِالْقَوْلِ خَطَأً قَوْمًا طَغِيْمَا

*(லஸ்னா ஜவாபன் மன்லா ஸஃபாஉ கல்பின்*
*ஸாரூ பில்கௌலி கதுஅ கௌமன் தகீமா)*

**உள்ளத் தெளிவில்லாதவர் சொல்லிற் பிழைப்போர்**
**கொள்ளும் நாட்டங்களெல்லாம் நிறைவேற்றிடோமே.**

صَلَــوَاتٌ مَــعْ سَــلَامِ
عَلَــى اَحْمَــدَ الْــاَنَامِ
اَهْلِ بَــيْــتِه الْــكِــرَامِ
صَحْبِــه اَعْلَى الْــمَقَامِ

(ஸலவாதுன் மஉ ஸலாமி
அலா அஹ்மதில் அனாமி
அஹ்லி பைதிஹில் கிராமி
ஸஹ்பிஹி அஉலல் மகாமி.)

مَرْحَــبًا اَهْــلًا وَّسَهْــلًا
اَنْبِــيَــآءَ كُــلَّ رُسْــلًا
قُطْــبَ اَوْلِيَــآءَ اَعْلٰــى
مَقَــامَ الْعُــرَفَــآءِ اَهْلًا

(மர்ஹபன் அஹ்லன் வஸஹ்லா
அன்பியாஅ குல்ல ருஸ்லா
குத்ப அவ்லியாஅ அஉலா
மகாமல் உரஃபாஇ அஹ்லா.)



சோபனம் சுப சோபனமே
சோபனம் ஆதிமுதற்கே
சோபனம் குழாத்தினர்க்கே
சோபனம் தோழர்தமக்கே

வாழ்த்துவோம் ஒன்றாய் நிறைந்து
மாண்புற விரவிக்கலந்து
ஊழ்வினையைப் போக்குவோமே
உறுதுணையை நாடுவோமே

முத்தி மோட்சம் பெற்றிடுவோம்
சுத்த சத்யமே அடைவோம்
சுத்த சத்யமே அடைவோம்
நித்ய ஜீவன் பெற்றிடுவோம்.

**(ஸல்லள்ளாஹு அலா முஹம்மத்**
**ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம்**
**ஸல்லள்ளாஹு அலா முஹம்மத்**
**யாரப்பி ஸல்லி அலைஹி வஸல்லிம்).**

(முற்றும்)

| விளக்கம் | | | அடி | பா |
|---|---|---|---|---|
| விம்முஞ்சுடர் | : | பொலிவுறும் ஜோதி | 2 | 3 |
| கோள் | : | கிரகங்கள் முதலாயின | 2 | 5 |
| சிவம் | : | உலக ஆசாபாசங்களில் கண்டுண்டாத பரிசுத்த ஆத்மா | | |
| ஜீவம் | : | (ஜீவன்) உலக ஆசாபாசங்களில் கண்டுண்ட ஆத்துமா | 2 | 6 |
| பூதங்கள் | : | பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம். ஐம்பூதங்களோடு கூடிய ஞானேந்திரியங்கள் : சதரோத்ரம் (ஒலியுணர்வு) துவக்கு (பரிசஉணர்வு) சட்சு (பார்வையுணர்வு) சிங்கு (வை) (உருசியுணர்வு) ஆக்ராணம் (மணவுணர்வு) ஐம்பூதங்களோடு கூடிய அகங்கரணங்கள் : உள்ளம் (ஆகாயம்) மனம் (வாயு) புத்தி (அக்கினி) சித்தம் (தண்ணீர்) அகங்காரம் (மண்) | 1 | 8 |
| தட்பம் | : | குளிர், வெப்பம், உஷ்ணம், தட்பமும் வெப்பமும் சரிசமனாய் இருத்தலின் உலகுய்யும். இவைமிக முக்கியமானவை. ஆட்சிப் பொறுப்புக்கள் இவற்றுள் அமைந்துள்ளன காண்க. | | |

*(முற்றும்)*

# قَصِيْدَةُ الْاَحْمَدِيَّة

وتليها

# قَصِيْدَةُ الْعَوْنِيَّة

# கஸீதத்துல் அஹ்மதிய்யா

(மற்றும்)

# கஸீதத்துல் அவ்னிய்யா

குத்புஸ்ஸமான், ஷம்ஷுல் வுஜூத், ஜமாலிய்யா

**அஸ்ஸய்யித் கலீல் அவ்ன்**

அல்ஹஸனிய்யுல் ஹாஷிமிய் மௌலானா நாயகமவர்களின்

## ஞான வெளிப்பாடுகள்

வெளியீடு

ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை

قَصِيْدَةُ الْاَحْمَدِيَّة

وتليها

قَصِيْدَةُ الْعَوْنِيَّة

கஸீதத்துல் அஹ்மதிய்யா

(மற்றும்)

கஸீதத்துல் அவ்னிய்யா

குத்புஸ்ஸமான், ஷம்ஷுல் வுஜூத், ஜமாலிய்யா

அஸ்ஸய்யித் கலீல் அவ்ன்

அல்ஹஸனிய்யுல் ஹாஷிமிய் மௌலானா நாயகமவர்களின்

ஞான வெளிப்பாடுகள்

வெளியீடு

ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை